இரண்டாம் நிலைப் பள்ளிகளில் மூன்றாண்டுகள் பணியாற்றியிருந்தால், தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு ஆசிரியர் தொகுதியிலிருந்து நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க அவர்களுக்குத் தகுதி உண்டா?

(இ) ஆமெனில், இதைத் தெளிவுபடுத்துவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சாதாரணமாக ஆசிரியர் தொகுதியில் தங்கியுள்ளவரும், வாக்காளர் பட்டியல் தயாரிக்க அல்லது திருத்தியமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஆண்டின் நவம்பர் திங்கள் 1 ஆம் நாளுக்கு முன் உள்ள ஆறு ஆண்டுக் காலத்தில் இம்மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தரத்திற்குக் குறையாத கல்வி நிறுவனங்கள் எவற்றிலேனும் மூன்று ஆண்டுக் காலம் பணிபுரிந்துள்ளவருமான ஒவ்வொருவரும் அத் தொகுதி வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதி யுடையோராவார்.

2. வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தி, சம்ஸ்கிருத பண்டிதர்கள் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்வாராயின், அவர்கள் ஆசிரியர்கள் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படு வதற்குத் தகுதியுடையோராவார்.

Graduate Teachers in ' A ' Wing Government High School Services.

* 219 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Graduate Teachers in ' A ' Wing Government High School Srvices, who acquire post-graduate degrees and who are desirous of getting into Government Colleges as Assistant Professors are recommended by the Director of School Education to the Director of Collegiate Education by means of a panel;

(*b*) if so, whether the same benefit will be extended to the graduate teachers in ' B ' Wing Government High School Services; and

(*c*) will the Government consider removing the disparity in the treatment to ' A ' Wing and ' B ' Wing personnel in this regard?

1972 ஆகஸ்ட் 23]

"ஏ" பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிப் பணியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநர், பட்டமேற்படிப்புப் பட்டம் பெற்றுள்ள அரசுக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகப் பணியாற்ற விரும்பும் "ஏ" பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிப் பணியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்களைப் பரிவுரை செய்து அதற்கென்று பட்டியலைத் தயாரித்து கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்புகிருரா ?

(இ) ஆமெனில், இத்தகைய சலுகை அரசு உயர்நிலைப் பள்ளி "பி" பிரிவு ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறதா?

(உ) இது குறித்து "ஏ" பிரிவினருக்கும் "பி" பிரிவினருக்கும் இடையே காட்டப்படும் வேறுபாடு அகற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தகுதி வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்களை அவ்வப்பொழுது கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கிருர். இதற்கென்று தகுதி வாய்ந்தோர் பட்டியலொன்று பள்ளிக் கல்வி இயக்குநர் தயாரித்து வைத்துக்கொள்வதில்லை.

(இ) இத்தகைய சலுகை "பி" பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அளிக்க விதிகள் இடந்தரவில்லை என்றாலும் அப்பிரிவைச் சார்ந்த தகுதியுடைய பட்டதாரி ஆசிரியர்களின் உதவிப் பேராசிரியர் பதவிக்கு அனுப்பும் விண்ணப்பங்களையும் பள்ளிக் கல்வி இயக்குநர் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கிருர்.

(உ) கேள்விக்கிடமில்லை.

Abortion under the Family Planning Scheme

220. *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state : the number of women who underwent induced abortion under the Family Planning Scheme till 31st March 1972 in Tamil Nadu?